6th August 1966]
தவறுமல் ஆசிரியர்களுக்கு, ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களுக்கு மட்டு மல்லாமல் தனிப்பட்ட பள்ளி ஆசிரியர்களுக்கும் அப்போதைக்கப் போது பஞ்சப்படி உயர்த்தப்பட்டு வருகிறது.

ஆதாரப் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு உதவிப்பணம்

* *149 கேள்வி.*—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிக்கு ஜூனியர் பேசிக் படிப்பவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை நிறுத்த சமீபத்தில் அரசாங்கம் உத்தரவிட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ஆ. தங்கவேலு : சென்ற ஆண்டு ஜூனியர் பேசிக் படிப்பவர்களுக்கு உதவித் தொகை நிறுத்தப்பட்டு, பிறகு கொடுக் கப்பட்டது. இந்த ஆண்டு அந்த உதவித் தொகை கொடுக்கப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹையர் கிரேடு டிரெய்னிங் எதுவரை இருக்கிறதோ அது வரை கொடுக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை 18 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், கிராம சேவக் பயிற்சி பெறுபவர் களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இரண்டு பேரும் எஸ்.எஸ்.எல்.சி. தான். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது வேறு பயிற்சி. அது வேறு பயிற்சி. எந்தெந்தப் பயிற்சிக்கு எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து உதவித் தொகை நிர்ணயிக்கப் படுகிறது.

* 150 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representation was received from the students of the Basic Training School, Aralvoimozhi in Kanya-kumari district regarding stoppage of stipend;

(*b*) if so, the reasons for stopping the stipend in the middle; and

(*c*) whether any decision has been taken to restore the grant of stipend?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The payment of stipend was not stopped.

(*c*) Does not arise.